# 13-05-2024 செய்தி

## இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்பும் இந்தியா

- பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல் 6 மாதங்களைக் கடந்து நீடித்து வருகிறது. இதனிடையே இஸ்ரேலில் கட்டுமான வேலைகளில் பணி புரிந்து வந்த 90 ஆயிரம் பாலஸ்தீனத் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதால் இஸ்ரேலில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது.
- கட்டுமான துறையை மேம்படுத்துவதற்காக சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து 70 ஆயிரம் தொழிலாளர்களை அழைத்து வர இஸ்ரேல் முடிவு செய்தது.

**இந்தியாவிலிருந்து 10 ஆயிரம் தொழிலாளர்கள்**

- 10,000 இந்திய கட்டுமான தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்ப இந்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது.
- இஸ்ரேலில் கட்டுமான வேலைகள் செய்வதற்கு மாதம் ரூ.1.36 லட்சம் சம்பளத்தில், 45 வயதுக்குட்பட்ட 10,000 தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்று தேசிய திறன் மேம்பாட்டு கழகம் கடந்த டிசம்பர் மாதம் விளம்பரம் வெளியிட்டது.
- பிஹார், பஞ்சாப், ஹரியானா, உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் இதற்கான வேலைவாய்ப்பு முகாமில் குவிந்தனர்.
- அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் சமீபத்திய ஆய்வில் கரோனா ஊரடங்குக்குப் பிறகு 15 சதவீதத்துக்கும் அதிகமான பட்டதாரிகளுக்கும், 25 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகளில் 42 சதவீதம் பேருக்கும் வேலை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கரோனா ஊரடங்கு மற்றும் பொருளாதார கணக்கத்தின் காரணமாக நிலையான முறைப்படுத்தப்பட்ட ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் இந்தியாவில் குறைந்து விட்டன.
- இந்தச் சூழலில் அதிக வருமானம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் போர்ச் சூழல் நிலவும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு வேலைக்கு செல்லும் முடிவுக்கு இந்திய இளைஞர்கள் வருகின்றனர் என்று பொருளாதார நிபுணர் ரோசா ஆபிரகாம் குறிப்பிடுகிறார்.

**கேள்விக்குறியாகும் பாதுகாப்பு**

- அயல்நாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பல விஷயங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தில் இ-மைகிரேட் தளம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த தளத்தின் நோக்கமே தொழிலாளர்களின் பாதுகாப்பையும், வேலைக்கான தயார் நிலையையும் உறுதிப்படுத்துவதே.
- இதில் பதிவு செய்துவிட்டு வெளிநாடு செல்பவர்களுக்கு காப்பீடு உள்ளிட்ட தொழிலாளர் நலன் கவனத்தில் கொள்ளப்படுகிறது.
- இந்த தளம், குடிபெயர்வோர், பாதுகாவலர் அலுவலகம், தூதரகங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், பாஸ்போர்ட் அலுவலகங்கள், ஆள்சேர்ப்பு நிறுவனங்கள், வேலை தருபவர்கள் மற்றும் குடிவரவு பணியகம் ஆகியவற்றுக்கு இடையே சர்வதேச தொழிலாளர் புலம்பெயர்வில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துகிறது.
- 1983-ம் ஆண்டின் குடியேற்ற சட்டத்தின்படி அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் இந்த காப்பீட்டுத் திட்டம் கட்டாயமாகும்.
- ஆனால், தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தினால் தேர்வு செய்யப்பட்டு இஸ்ரேலுக்கு செல்லும் தொழிலாளர்கள் யாரும் இந்த இ-மைகிரேட் போர்ட்லில் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அடிப்படை உரிமைகள் கூட இல்லை**

- இந்திய இஸ்ரேல் ஒப்பந்தத்தின்படி இஸ்ரேலுக்கு செல்லும் தொழிலாளர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட அனைத்து விதிமுறைகளையும் செயல்படுத்தும் பொறுப்பு தேசிய திறன் மேம்பாட்டு கழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஆனால், தொழிலாளர் நலன் சார்ந்த கெடுபிடிகள் எதுவும் இருக்கக் கூடாது என்ற இஸ்ரேலின் கோரிக்கையை ஏற்று தொழிலாளர்களின் பாதுகாப்பு விஷயத்தில் இந்திய அரசு சமரசம் செய்து கொண்டுள்ளதாக தெரிகிறது.